சீனப் பிரதமர் இந்தியா வந்தார்!

REGD. No M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | சென்னை: ஆனி மீ 12உ சனி (26—6—54) | மலர்: 2
இலங்கையில் 10 சதம் | வெளியூர்: ஆனி மீ 13உ ஞாயிறு (27—6—54) | இதழ்: 11

பல நாட்டு தூதுவர் புடைசூழ நேரு வரவேற்றார்

வரவேற்பில் பங்கு பெற அமெரிக்க-ஜப்பான் தூதுவர் மறுப்பு!

சீனப் பிரதமரின் வருகையை முன்னிட்டு இந்திய ஜனாதிபதியினால் ஏற்பாடு செய்யப்பட்ட வரவேற்புக்கு எல்லா நாட்டுத் தூதுவர்களும் அழைக்கப்பட்டார்கள் என்று தெரிகிறது; ஆனால், அமெரிக்கா, ஜப்பான் நாட்டுத் தூதுவர்கள் சீனப் பிரதமருக்கு அளிக்கப்படும் வரவேற்பில் கலந்துகொள்ள மறுத்துவிட்டனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

நல்லதோர் அரசியல் காண்கொள்ள!

—(:)—

சமூகக் குறைபாடு தொலைய வேண்டும்

—:o:—

மாசற்ற சமூகத்தை ஆட்டிப் படைக்க முடியாது சில அதிகார விரும்பிகளால்!

மதம், கடவுள்—வெறும் கற்பனை!

வேலூர் சமூக சீர்திருத்த மாநாட்டுத் தலைவர் ஈழத்தடிகள் கருத்துரை

வேலூர், ஜூன் 26—

வட ஆற்காடு தி. மு. கழக இரண்டாவது சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள், வேலூரில் டவுன் ஸ்டேஷனுக்கு எதிரில் அமைந்துள்ள அழகிரி பந்தலில்—மூத்து அரங்கில் இன்று துவங்கிற்று.

முதல் நாளான இன்று, சமூக சீர்திருத்த மாநாடு இசைமுரசு நாகூர் அனிபா குழுவினரின் இன்னிசையுடன் ஆரம்பமாயிற்று; தோழர் இரா. நெடுஞ்செழியன் மாநாட்டுத் திறப்புரையாற்றினார்; தோழர் வ. எல். சி. கிருட்ணசாமி வரவேற்புரையாற்றினார்; திரு. ஈழத்தடிகள் மாநாட்டிற்குத் தலைமை தாங்கி, முன்னுரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:—

இன்று இங்கு நடைபெற இருக்கும் சமூக சீர்திருத்த மாநாட்டிற்கு, என்னைத் தலைமை தாங்கும் ஏற்பாட்டினை உண்டாக்கி வைத்த வடார்க்காடு மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழக வரவேற்புக் குழுவினர்க்கும் ஏனையோர்க்கும் என் நன்றியறிதலை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

1938-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்ட வெற்றிக்குப் பின்னர், நான், என் உடல்நிலையின் காரணமாக, ஒரிடத்திலேயே தங்கியிருந்து—அதுவும் இயக்கப் பணியை நன்முகச் செய்யும் இடமாகப் பார்த்து—அங்கேயிருந்து கொண்டு என்னாலான இயக்கத் தொண்டினை, என்னால் முடிந்த வரை செய்து கொண்டிருக்கிறேன். அதிலும் அண்ணாவின் அணைப்பின்கீழ் இருந்து பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றிருப்பதே பெரும் பேறெனக் கருதிக்கொண்டிருக்கும் என்னை, வயது முதிர்ந்து, நோய்வாய்ப்பட்டு, சில மணி நேரங்கூட நின்று பேச முடியாத நிலையிலிருக்கும் என்னை வடார்க்காடு மாவட்டத்தினர், இந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கும்படி கேட்டு இந்தப் பொறுப்பினைத் தந்தது, அவர்கள் என்பால் கொண்டுள்ள பேரன்பென்றே நான் கருதுகிறேன். அவர்களின் அன்பிற்கு மீண்டும் எனது நன்றி.

திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய நாம், கழகம் கண்ட நாளிலிருந்து, இரண்டு மாநாடுகளை இரண்டு நாட்களில் நடத்தி வருகிறோம். ஒன்று சமூக சீர்திருத்த மாநாடு; இன்னொன்று அரசியல் மாநாடு; முதல் நாள் நடப்பது சமூக சீர்திருத்த மாநாடு; இரண்டாவது நாள் நடப்பது அரசியல் மாநாடு இப்படி இரண்டு மாநாடுகள் தேவையா? அவசியமா என்ற ஐயப்பாடு சிலருக்கு இருக்கலாம். மற்ற அரசியல் கட்சிக்காரர்கள், இப்படியெல்லாம் இரண்டு மூன்று மாநாடுகளை நடத்துவதில்லையே, இவர்கள் மட்டும் ஏன் இரண்டு மாநாடுகளை நடத்துகிறார்கள் என்றும் சிலர் கேட்கலாம். அதிலும் முதலில் சமூகம், பிறகு அரசியல் என்று ஏன் நடத்த வேண்டும்?—என்ற ஐயப்பாடும் சிலருக்கு ஏற்படாமல் இருக்காது.

மற்றக் கட்சிக்காரர்கள், அரசியல் ஒன்றினால் மட்டுமே எல்லாக் காரியங்களையும் சாதித்துவிடலாம் என்ற நோக்கத்தோடு வேலை செய்பவர்கள். நாம் அப்படியல்ல. சமுதாயத்திலுள்ள குறைபாடுகள் நீங்கினாலொழிய—நீக்கப்பட்டாலொழிய நல்லதொரு அரசியலைக் காண முடியாதென்ற நம்பிக்கை கொண்டவர்கள், திருந்திய சமுதாயத்தில்தான் நேர்மையான அரசியலைக் காண முடியும்—நடத்த முடியும்—என்ற அசைக்க முடியாத நம்பிக்கையைக் கொண்டவர்கள். அதனாலேயேதான், முதலில் சமுதாயம். இரண்டாவது அரசியல். என்று பிரித்திருக்கிறோம். அது மட்டுமல்ல, முதலில் சமுதாயம் இரண்டாவதுதான் அரசியல் என்று பிரித்து வைத்திருப்பதற்கு இன்னொரு காரணமும் உண்டு. அதாவது, அரசியலைவிட சமுதாயத்திற்கே அதிக மதிப்புக் கொடுப்பவர்கள் நாம். திருந்திய சமுதாயத்தை யார் ஆட்சி புரிந்தாலும் கவலையில்லை என்று இருப்பவர்கள் நாம். காரணம், திருந்திய ஒரு சமுதாயத்தை எந்த அரசியல்வாதியும் தன் பக்கம் இழுத்துவிட முடியாது. அதனாலேயே, நாம் அரசியலைப்பற்றி அதிகக் கவனம் எடுத்துக்கொள்வதில்லை. அரசியலிலே பொருளாதாரம்தான் மிக முக்கியமாகக் கருதப்படுவது. திருந்திய சமுதாயம், பொருளாதார ஏற்றத்தாழ்வுக்கு ஒருபோதும் இடமளிக்காது எனவேதான் சமுதாயத்தைத் திருத்தியமைக்கும் பணியை நாம் முதன்மையாகக் கொண்டிருக்கிறோம். இதனை, நம்மைப்பற்றித் தவறுக் கணக்குப் போட்டுக்கொண்டிருப்பவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சமூக சீர்திருத்தம் என்பதற்கு பலர் பலவாறுகப் பொருள் கொண்ட போதிலும், பல வகையாகப் பிரிந்து பிளவுபட்டுக் கிடந்தழிவதியும் நம் இன மக்களை—திராவிட மக்களை—ஒன்றுபடுத்தி நாமெல்லாம் ஓர் இனம் என்று கருதும்படி செய்வதையே சமூக சீர்திருத்தம் என்று நாம் கொள்கிறோம். ஒரு காலத்தில் ஓர் இனமாக ஒற்றுமையுடன் வாழ்ந்த நாம், இடையில் எதனால் ஏன் பிளவுபட்டோம் என்பதை ஆராயும்போது, இதற்கு முதற் காரணமாய் இருப்பவை மதமும்கடவுளும்தான் என்பதை எவரும் மறுக்க முடியாது. மதம்—கடவுள் என்பனவற்றின் பேரால் புகுத்தப்பட்ட இயற்கைக்கு மாறான கொள்கைகள்தான். நம்மையெல்லாம் இந்நிலைக்குக் கொண்டுவந்து விட்டனவாகும். இந்த உண்மையை எல்லோரும் உணர்ந்து ஒப்புக்கொண்டுவிட்டால், இப்பொழுது நிலவிவரும் பிளவுகளும்—அதன் காரணமாக ஏற்படும் சச்சரவுகளும் இல்லாதொழியும் என்பது எனது கருத்தாகும்.

ஆண்டவனைப் பாதுகாப்பதற்கு மதம் என்னும் அகழியும், மதத்தைப் பாதுகாப்பதற்கு புராண இதிகாசங்கள் என்னும் மதிற்சுவரும் சுற்றியமைக்கப்பட்டிருப்பதை மக்கள் அறியவும் அதைப் பற்றி ஆராயவும் தொடங்கிவிட்டார்கள்—எங்களையும் பிற உயிர்களையும் படைத்துக் காத்து இரட்சிப்பதாகச் சொல்லப்படும் ஆண்டவனுக்கு இத்தனைப் பாதுகாப்புகள் எதற்காக? எங்களைப் படைத்த ஆண்டவனை, நாங்களே அறியும்படி செய்ய முடியாத ஆண்டவன், தன்னை அறிவிப்பதற்கு ஒரு மதத்தையும், அதனை விளக்குவதற்குப் புராண இதிகாசங்களையும், இவற்றை விளக்குவதற்கு நம்மவர்களிலேயே சிலரையும் ஏற்பாடு செய்திருக்கின்றானே! தன்னை தானே பாதுகாக்க முடியாமல், அதற்காக வேறு சில ஏற்பாடுகளை உண்டாக்கி வைத்துக் கொண்டிருக்கும் ஒரு ஆண்டவன், எங்களையெல்லாம் படைத்துக்காத்து இரட்சிக்கின்றான் என்று சொல்லப்படுவதை நாங்கள் எப்படி நம்ப முடியும்—ஒப்புக்கொள்ள முடியும்—என்று மக்கள் எல்லோருமே சிந்திக்கத் தொடங்கிவிட்டால் நம்முடைய இலட்சியம் விரைவில் கைகூடும் என்பதில் ஐயமில்லை.

ஒரு காலம் இருந்தது—மதக் கோட்பாடுகள் எப்படியிருந்தாலும், அவை யாரால் சொல்லப்பட்டிருந்தாலும் அவற்றை மக்கள் அப்படியே நம்பவேண்டும்; நம்பாவிட்டால் நரகம் என்று இந்த நிலை மக்களிடம் மாறுமலிருந்த காலம்வரை மதப் புலவர்கள் பாடு மிகவும் கொண்டாட்டமாகவே இருந்தது. மதக் கோட்பாடுகளை மக்களிடையே பதியவைப்பதற்குத் தாங்கள் எதை — எப்படிக் கூறினாலும் அவற்றையெல்லாம் மக்கள் நம்பாதொழியார் என்ற நம்பிக்கை அவர்களை, எதை வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் எழுதும்படியும், பேசும்படியும் செய்தது. "இப்படியெல்லாம் இல்லாதவையும்—இருக்க முடியாதவையும்—இருக்க வேண்டிய அவசியம் இல்லாதவையும், இயற்கைக்கு மாறாகவும், அறிவுக்கு ஒவ்வாததாகவும் எழுதுகிறோமே இவற்றை மக்கள் நம்புவார்களா? நம்பும்படி செய்வது முறையா? மக்கள் நம்புவது ஒருபுறம் இருக்கட்டும், இவற்றை எழுதுகின்ற நாமாவது இக்கதைகளை நம்புகிறோமா? நாமோ அன்றிப் பிறரோ நம்பக்கூடிய முறையில் நம்மால் எழுதப்படும் கதைகள் அமைகின்றனவா? என்று கூட எண்ணிப் பார்க்க நேரமும் அறிவும் இல்லாத நிலையில், அவசர அவசரமாக ஆயிரக் கணக்கான அண்டப் புளுகுகளை ஆண்டவன் பேரால் சொல்லி எழுதிவைத்த

(4-ம் பக்கம் பார்க்க)

ஓராசிரியர் பள்ளி

ஆசிரியர் நியமிக்க சர்க்கார் ஏற்பாடு

சென்னை, ஜூன் 25—

படித்தோரிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க திட்டக் கமிஷன் திட்டத்தின்கீழ், புது ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியர்கள் நியமிக்கப்படுதல் சம்பந்தமாக ஆசிரியர்கள் அனைவரும் வேலை தேடித் தரும் ஸ்தாபனங்கள் மூலமாகவே நியமிக்கப்பட வேண்டுமென்று சென்னை சர்க்கார் கூறியுள்ளனர்.

இதுபற்றி ஜில்லா போர்டு பிரசிடெண்டுகள் அதிகாரிகள், நகரசபைக் கமிஷனர்கள் செய்து கொண்ட கோரிக்கைகளை ஒட்டி சென்னை சர்க்கார் கல்வி இலாகா டைரக்டர் மூலமாக விபரமான ஆலோசனைகளை அனுப்பியுள்ளனர்.

மாணவர் அமைச்சரானார்!

கராச்சி, ஜூன் 26—

விஸ்தரிக்கப்பட்ட சிந்து மந்திரி சபையில் மாணவரொருவர் கல்வி மந்திரியாகியுள்ளார். அவருடைய வயது 36!

எம். ஏ., எல். எல். பி. படிக்கும் இவர் கல்வி மந்திரியாக பதவி ஏற்றார். 5 பேர் கொண்ட மந்திரி சபையில் இப்போது 11 பேர் உள்ளனர்.

நம் நாடு

சென்னை 26-6-54 சனி

கற்பாரா பண்டிதர்?

நவ சீனத்தின் பிரதமர் ஷோ-யென்-லெய், இந்தியா வந்திருக்கிறார். இந்தோ-சீனா எதிர்காலம் பற்றித் தான் பேச வந்திருக்கிறாரோ அல்லது இந்திய — சீன உறவை மேலும் கெட்டிப் படுத்திக் கொள்ளத்தான் வந்திருக்கிறாரோ, இந்தியப் பிரதமர் பண்டித நேருவுடன் பேசி முடிந்த பின்னர்தான், வந்த விவரத்தை ஓரளவு புரிந்து கொள்ள முடியும்.

நவசீனப் பிரதமர் தம்மிச்சையாக, இங்கு வரவில்லை அவ்வாறு தம்மிச்சையாக சீனப் பிரதமர், இங்கு வந்திருக்க வேண்டுமானால் இந்தோ—சீனப் போர் உச்சநிலையை அடைந்த போதும் ஆசிய அரசுகள் மாநாடு என இலங்கையில், இந்தியா பாகிஸ்தான், சிலோன், பர்மா, இந்தோனேஷியா ஆகிய நாட்டுப் பிரதிநிதிகள் கூடிப்பேசி ஒரு முடிவிற்கு வந்த நேரத்திலும், இந்தியப் பிரதமரைக் காண வந்திருக்கவேண்டும்.

நவசீனாவும் ஒரு ஆசிய நாடு தான்; மற்றொரு ஆசிய நாடான இந்தோ சீனாவை விட்டு பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை விரட்ட, மற்றொரு ஆசிய நாடான இந்தியாவின் அறிவுரையையும், ஒத்துழைப்பையும் நாடி, ஆசிய நாடான சீனா, இங்கு வந்திருக்க வேண்டும். அவ்வாறு, இந்தோ-சீன விவகாரத்தில் ஆசிய நாடான இந்தியாவின் கருத்தறிய வேண்டியதற்கான, தக்கதோர் சூழ்நிலை உருவாகவில்லை எனச் சமாதானம் கூறுவதானாலும், இந்தோ-சீன எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்கென்றே கூட்டப்பட்ட ஜெனிவா மாநாட்டிற்குச் சீனப் பிரதமர் சென்றபொழுதாவது, டில்லியில் இறங்கி, இந்தியப் பிரதமர் நேருவைக் கலந்து ஆலோசித்து விட்டு, ஜெனிவா பயணத்தைத் தொடங்கி இருக்கவேண்டும்.

இப்படி நடந்து கொள்ளவில்லை சீனப் பிரதமர். சீனாவின் இத்தகு போக்கிற்கு என்ன காரணம்? அதில் ஏதாவது சூட்சுமம் இருக்கக் கூடுமா? சீர்தூக்கிப் பார்த்து முடிவுக்கு வரக்கூடியது!

அவசியமான காலத்தில் எல்லாம் இந்தியப் பிரதமரைக் கண்டு அளவளாவி, ஆத்மார்த்தமாகப் பழகவேண்டும் எனக் கருதாத நவசீனப் பிரதமர், இப்பொழுது வந்திருக்கிறார் என்றால் அதில் ஏதாவது இரகசியம் இருக்கத் தான் வேண்டும். அப்படியும் உறுதியாகச் சொல்வதற்குமில்லை.

இப்பொழுதும், சீனப் பிரதமர் ஷோ—யென்—லெய், தம் விருப்பமாக இந்தியப் பிரதமரைக் காண வரவில்லை. வெளிநாட்டுப் புகழ் ஒன்றையே தேடுதற்கரிய பெரும் மூலதனமெனக் கொண்டு, அதைப் பெறுவதையே தனது பதவிக் காலக் குறிக்கோளாகக் கொண்டு, உள்ளமும் உடலும் வியர்த்து அலைகிற இந்தியப் பிரதமர், 'வாரீர்! எம்மைக் காணீர்,' எனத் தூது விடுத்திருக்கிறார் ஷோ-யென்-லெய் தங்கி இருந்த ஜெனிவா நோக்கி!

தூதுவர் மூலம் அனுப்பிய அழைப்பை சீனப் பிரதமர் ஒப்புக்கொள்ளுவாரோ மாட்டாரோ, ஒருக்கால் ஒப்புக் கொண்டாலும், ஜெனிவாவிலிருந்து டில்லி வர செலவாகும் தொகையை ஏன் வீணுக்கு ஏற்க வேண்டும் என, சீனப் பிரதமர் எண்ணிவராது இருந்துவிட்டால் என்ன செய்வது என்ற அச்சந்தான் காரணமோ என்னமோ, சீனப் பிரதமரை ஏற்றிவர, இந்தியாவிலிருந்தே சிறந்த விமானத்தையும் அனுப்பி அழைத்து வந்திருக்கிறார் டில்லிக்கு! சிறந்த,

சீனப் பிரதமர் ஷோ-யென்-லெய், பண்டிதரை சந்தித்ததும், பேசுவார் ஏதேதோ! அவ்வளவும், முன் கூட்டி திட்டமிட்டதாக இருந்திடும்! எழுத்துக்கு எழுத்து, சொல்லுக்குச் சொல், உச்சரிப்புக்கு உச்சரிப்பு, அப்படியே இருக்கும் சீனப் பிரதமர் உரையில்! முகபாவத்திலேகூட, மாறுதல் காணமுடியாது பண்டிதரால்!

ஆனால், இதயத்திலே பொங்கி எழும் பூரிப்பை, பண்டிதரின் விழிகள், சீனப் பிரதமர் காண, விருந்தமுதூட்டும்!

தம் ஆட்சியில் மக்கள் பெற்றுள்ள மகோன்னத நிலையை, நளினமான சொற்களால், அலங்காரப் பந்தல் போட்டுக் காட்டுவார், பண்டிதர்!

ஐந்தாண்டு திட்டத்தின் அருமை பெருமைகளை விளக்குவார்!

தேசிய நல ஏற்பாட்டின் வெற்றியை முழக்குவார்!

சமூக நல திட்டத்தின் சாதனைகளைச் சுட்டுவார்!

இலங்கை மாநாட்டில், தாம் பெற்ற மகத்தான வெற்றியை மனமகிழ்ந்து கூறுவார்!

பெரிய மனிதர்—பாரதத்தின் பிரதமர்—பண்டிதர் நேரு பகருகிறாரே என, பிரிய மிகுதியாலும், மரியாதைக்காகப் பெருமூச்செறிந்த வண்ணம், சீனப் பிரதமர் செவி சாய்த்துக் கேட்பார்! சிரிக்க மாட்டார் — சிந்திக்கமாட்டார் —பார்மோசாவில் மறைந்து வாழும் சியாங்கை கருதிப் பார்ப்பார்!

ஆசிய விவகாரத்தை ஆசிய நாடுகளே, தங்களுக்குள்ளாகத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என உபதேசித்து வரும் பண்டிதர், காஷ்மீர் விவகாரத்தில் முடிவு காண முடியாமல் திண்டாடுகிறாரே என சீனப் பிரதமர், உள்ளூர நினைப்பார்; ஆனால், பண்டிதர் காதுபடக் கூறார்!

இலங்கைவாழ் தமிழர் பிரச்சினையை தீர்த்துக் கொள்ள முடியாமல் இந்தியப் பிரதமர் ஏமாந்து இருக்கிறாரே என, சீனப் பிரதமர் யோசிப்பார்; ஆனால், அதைப் பண்டிதருக்குப் புரியவைக்க மாட்டார்!

இதுபோன்ற இன்னும் பலப்பல பிரச்னைகள், சீனப் பிரதமர் கருத்திலே மோதும்!

சீனப் பிரதமர் ஷோ-யென்-லெய் இந்தியப் பிரதமர் நேருவுடன் கைகுலுக்கும் நேரத்தில், தேனீர் பானம் பருகும் நேரத்தில், அறுசுவை உணவு உண்ணும் நேரத்தில், இது போலவே, சில ஆண்டுகளுக்கு முன், அக்காலத்தில், இன்று நாம் இருப்பதுபோலவே முடிபூணு வேந்தனாய், காவல் மிக்க கோட்டைவாசியாய், வாழ்ந்து, மக்களால் தூக்கியடிக்கப்பட்ட சீனத் தலைவர் சியாங்-கே-ஷேக் தம்பதிகளுடன், கை குலுக்கினதும், பருகினதும், உண்டதும், பண்டிதரின் மனக் கண்முன் தோன்றாமலா போகும்? அதில், பண்டிதர் கற்றுக் கொள்ள வேண்டிய உயர்ந்த படிப்பினை பல உண்டு! கற்பாரா பண்டிதர்?

அதிகாரம், போதை தரக் கூடியது! பரிபூரண அதிகாரம் பரிபூரணமாக போதையைத் தரக்கூடியது!

சொர்க்கவாசல் தூதுவர்களுக்குக் கூலி நிர்ணயம்

ஆந்திர சர்க்கார் ஏற்பாடு

சென்னை, ஜூன் 24—

அர்ச்சகர்கள் அனுபவித்து வரும் இனும் நிலங்களின் வருமானம் பற்றி அர்ச்சகர்களின் பிரதிநிதிகளுக்கும், ஆந்திர சர்க்காருக்கும் இடையே ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது.

சென்ற சனிக்கிழமை அன்று ஆந்திர அர்ச்சகர்கள் பிரதிநிதிகளும், ஆந்திர சர்க்கார் சார்பில் அறநிலையப் பாதுகாப்பு கமிஷனர் வெங்கட ரெட்டி, உதவிக் கமிஷனர் பிரசாத ராவ், ஆந்திர அட்வகேட் ஜெனரல் நரசராஜு ஆகியோரும் இது சம்பந்தமாகக் கூடிப் பேசினர்.

இதன்படி நிலங்களின் உரிமை கோவில்களின் பெயரால் இருக்கும். இனும் நிலங்களை அனுபவித்துவரும் அர்ச்சகர்கள் அந்த நிலத்தின் வருமானம் ரூ 900-க்குக் குறைவானதென்றால் பூராத் தொகையையும் அவர்களே எடுத்துக் கொள்ளலாம். இந்த அர்ச்சகர்கள், 'அர்ச்சனை, பச்சகம், பரிசாரகம்' ஆகிய கடமைகளை நிறைவேற்ற வேண்டியது.

ரூ 901 முதல் ரூ 2000 வரை வருமானம் வரும நிலங்களை அனுபவிக்கும் அர்ச்சகர் வருமானத்தில் ஐந்தில் மூன்று பங்கை எடுத்துக் கொண்டு மீதித் தொகையை சர்க்காருக்கு கொடுக்க வேண்டும்.

ரூ 2,001 முதல் ரூ. 6000 வரை நில வருமானம் உள்ள அர்ச்சகர்கள் ஐந்தில் இரண்டு பகுதியை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் இந்த அர்ச்சகர்கள், அர்ச்சனை, பச்சகம், பரிசாரகம் இவைகளுடன் பக்னிகமும் செய்ய வேண்டுமாம்.

இதே நிபந்தனைகளுடன் ரூ 6001—12,000 வரை வருமானம் அளிக்கும் நிலங்களைக் கொண்ட அர்ச்சகர்கள் எட்டில் மூன்று பங்கை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் இதன் மூலம் அர்ச்சகரது வருமானம் ரூ 4,000-க்கு மேல் இருக்கக் கூடாது.

இதுபோலவே ரூ 12,000-க்கு மேற்பட்ட வருமானம் உள்ளவர்கள் ரூ 4,500-க்கு மேற்படாமல் எட்டில் மூன்று வருமா

(4-ம் பக்கம் பார்க்க)

ஊராட்சி மன்ற மேற்பார்வையில் போலீஸ் படையாம்!

அதுவும் ஊதியமில்லாத உபகாரச் சேவையாம்!

ஸ்தலஸ்தாபன அமைச்சர் மாநாட்டில் ஆலோசனையாம்!

திருச்சி, ஜூன் 25—

"கிராமப் பஞ்சாயத்துக்கள் 18-லிருந்து 30 வயதுவரை உள்ளவர்களைக்கொண்டு சொந்தமாக சேவா மனப்பான்மையுள்ள போலீஸ் படை ஒன்றை தனியாக அமைக்க வேண்டும்."

"காவல் புரிவது, பயிர்களைப் பாதுகாப்பது, சம்மன் போன்ற நீதி சம்பந்தமான வேலைகளைச் செய்வது, சட்டத்தையும் அமைதியையும் பாதுகாப்பது போன்ற கடமைகளை இந்தக் கிராமப் போலீசாரிடம் ஒப்படைக்கலாம்."

சிம்லாவில் நடைபெறப் போகும் ஸ்தல சுய ஆட்சி அமைச்சர்கள் மாநாட்டின் நிகழ்ச்சி நிரல் குறித்து ராஜ்ய சர்க்கார்களுக்கு அனுப்பப்பட்டிருக்கும் 40 பக்கம் கொண்ட அறிக்கை ஒன்றில் பஞ்சாயத்துக்களின் அதிகாரங்கள் என்பது பற்றி மேலே கூறியுள்ளபடி கண்டிருக்கிறதாம்.

சிம்லா மாநாடு, பஞ்சாயத்துக்களின் எல்லா அதிகாரங்கள் பற்றியும், அவைகளை அதிகப்படுத்துவது பற்றியும் ஆராயும் என்று திரு.-கொச்சி அமைச்சர் பி. என். குஞ்சு பேட்டி ஒன்றில் கூறினார்.

அவர் மேலும் சொன்னதாவது:—

பஞ்சாயத்துக்கள் திறமையுள்ள நிர்வாகப் பகுதிகளாக இயங்க ஆவன செய்யவேண்டும். வரி வசூலிப்பது, நீதி வழங்குவது, கிராம அபிவிருத்தித் திட்டங்கள், சுகாதாரம், கல்வி ஆகியவைகளை பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்கலாம் என்று அவர் கூறினார்.

ராஜ்ய சர்க்காரின் 'பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கும் அந்த அறிக்கையில் பஞ்சாயத்துகளுக்கும், ஜில்லா போர்டுகளுக்கும் இடையே ஒத்துழைப்பு அவசியம் என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

திருவாங்கூரில் ஜில்லா போர்டுகள் இல்லையாதென்றும், ஜில்லா போர்டுகளை எடுத்துவிட வேண்டும் என்பதற்கு சிம்லா மாநாட்டில் ஒருமித்த கருத்து காணப்படும் என்றுதான் நினைக்கவில்லை என்று குஞ்சு மேலும் கூறினார்.

ஸ்தல சுய ஆட்சி அமைச்சர்கள் கிராம பஞ்சாயத்துகளின் நிர்வாகத்தை மேற்பார்வையிடும் அமைப்பு ஒன்றைக் காண வேண்டுமென்று அவர் மேலும் கூறினார்.

இந்தியாவிற்கு எதிராக நேபாளத்தில் பிரசாரம்!

தீவிரமாக வளருவது கண்டு சர்க்கார் கவலை!

ஒழித்துக்கட்டப் போவதாக சபதம்!

நேபாளத்தின் நண்பர்களான அண்டை நாடுகளின் மீதோ அல்லது அந்த நாடுகளின் பிரதிநிதிகளின் மீதோ வெறுப்புணர்வு காட்டக்கூடாதென நேபாள அரசு கண்டித்துள்ளது.

அவ்வாறு வெறுப்புணர்வை வளர்ப்பவர்கள்மீது சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுக்கும் என, அரசாங்க குறிப்பொன்று கூறுகிறது.

இந்தியாவுக்கு நேபாள தூதராக நியமிக்கப்பட்டுள்ள மகேந்திர விக்ரம ஷா எனபவர் "எந்தக் காலத்திலும் — கஷ்ட காலமோ அல்லது நல்ல காலமோ — எப்போதும் இந்தியாவும் நேபாளமும், தோழமையுடனேயே இருக்கும்; இந்த இரண்டு நாடுகளுக்கு மிடையேயும் பிளவு உண்டுபண்ண பத்தனிக்கும் எந்த ஒரு முயற்சியையும் நிச்சயமாக முறியடிக்க வேண்டும்" என்று தனக்கு தேசிய ஜனநாயகக் கட்சி தந்த பிரிவுபசாரக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் "இக்குள்ளவரின் ஒரு பிரிவினரால் பிரசாரம் செய்யப்படுகிற இந்திய எதிர்ப்பு உணர்வுகளை வளராது தடுக்கவேண்டும்" என்றும் அந்தக் கட்சித் தோழர்களைக் கேட்டுக் கொண்டார்.

'சபையின் முடிவை அமுல் செய்க!'

அரசியல் சட்டத்தை புறக்கணிப்பதற்கு தொழிற் கட்சியின் கண்டனம்

இங்கிலாந்து மக்கள் சபை உறுப்பினர்களின் சம்பளம உயர்த்தப்படமாட்டாது. இதை பிரதமர் சர்ச்சில், தானே சபையில் அறிவிப்பார் எனத் தெரிகிறது. சில நாட்களுக்கு முன்பு இங்கிலாந்து மக்கள் சபை உறுப்பினர்களின் சம்பளத்தை வருடத்திற்கு 500 பவுன் உயர்த்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

மந்திரி சபைக் கூட்டத்தில் இந்தச் சம்பள உயர்வுப் பிரச்னை விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. 200 முதல் 300 பவுன் வரை அங்கத்தினர்களுக்கு வருடாந்திர செலவுப் படியாகத் தரலாம் என்ற யோசனைக்கு பொதுவான ஆதரவு இருப்பதாகவும் தெரியவருகிறது.

மக்கள் சபையினர் ஒரு சுதந்திரமான வாக்குப் பதிவின் மூலம் செய்த முடிவை மந்திரி சபை நிராகரிப்பது கண்டு, தொழிற் கட்சி சங்கத்தினர்கள் கோபங் கொண்டுள்ளனராம். சுதந்திரமான வாக்குப் பதிவின் மூலம் செய்யப்பட்ட முடிவை, அரசியல் சட்டப்படி மந்திரி சபை நிறைவேற்றக் கட்டுப்பட்டிருந்தும், அந்த முடிவைப் புறக்கணிப்பதை எதிர்த்து, தொழிற் கட்சியினர் அரசாங்கத்தின் மீது கண்டனத் தீர்மானமொன்றைக் கொண்டுவரலாம் எனச் சொல்லப்படுகிறது.

மாநிலங்களுக்குள் — தோன்றும் பிணக்கை தீர்க்க!

மத்திய சர்க்கார் தலையை நீட்டுகிறது!

சென்னை, ஜூன் 24—

மின்சாரத் திட்டங்கள் நீர்ப்பாசனத் திட்டங்கள் போன்றவையால் இரு மாநில அரசாங்கங்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, திட்டம் நிறைவேறுவதே ஏற்படுமோனால் அந்தக் கருத்து வேறுபாடை மாற்றி ஒரு குறிப்பிட்ட வகையில் திட்டம் நிறைவேற வேண்டும் என்ற அதிகாரம் இந்திய சர்க்காருக்கு கிடைக்குமாறு ஒரு மசோதா தயாரிக்கப்பட்டுள்ளதாம். இது பற்றி இந்திய சர்க்கார் மாநில அரசாங்கங்களின் கருத்தையும் கேட்டுள்ளதாம்.

இதன்படி திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு இந்திய அரசாங்கத்திற்கே இருக்குமாம். இதை சென்னை சர்க்கார் ஆட்சேபிப்பதாகத் தெரிகிறது. திட்டத்தை சென்னையைப் பொறுத்த மட்டில் சென்னை அரசே நிறைவேற்ற முடியும் என்றும், அதற்கான நிபுணர்கள் இங்கு இருப்பதாயும் கருதப்படுகிறது.

மாநில அரசாங்கங்களின் கருத்தை அறிந்த பின், இந்திய சர்க்கார் மேற்குறிப்பிட்ட மசோதாவை கொண்டுவரும் எனத் தெரிகிறது.

பாக். இராணுவ ஆலோசகர் திருப்பி அழைக்கப்படுகிறார்?

இந்தியாவின் ஆட்சேபத்தின் பேரில் நடவடிக்கை

புதுடில்லி, ஜூன் 24—

இந்தியாவில் உள்ள பாக் ஹை கமிஷனரின் இராணுவ ஆலோசகரான நசிர் அகமது கான் திடீரென காராச்சி புறப்பட்டுச் சென்றார்.

இவரது நடவடிக்கைகள் பற்றி இந்திய சர்க்கார் ஆட்சேபம் தெரிவித்திருந்தது.

இந்தியாவில் உள்ள இராணுவம் பற்றிய புள்ளி விபரங்களை சேகரிக்கின்றனர் என்று கருதப்பட்ட இருவருடன் நசிர் கான் சம்மந்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

---

4 பேர் மரணம்

300 பேர் நோயுற்றனர்

கோவில் 'பிரசாதத்தின் மகிமை!'

கௌகாத்தி, ஜூன் 24—

கௌகாத்திக்கு அருகே 30 மைல் தூரத்தில் உள்ள கல்மாரி நகர் அருகில் பூஜை ஒன்றில் பலர், 'பிரசாதம்' உட்கொண்டனர் என்று தெரிகிறது.

பிரசாதத்தில் விஷம் கலந்திருந்ததாம். இதன் காரணமாக 4 பேர் மரணமடைந்தனர்; 300 பேர் நோயுற்றனர் என்று தெரிகிறது. அவர்களில் 4 பேருடைய நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாம். கௌகாத்தியிலிருந்து டாக்டர்கள் விரைந்திருக்கின்றனர்.

நெருக்கடி

மத்திய உணவு அமைச்சர் கித்வாயை உத்திரப் பிரதேச காங்கிரஸ் காரியக் கமிட்டியின் உறுப்பினராக, கமிட்டியின் தலைவர் அல்குராய் சாஸ்திரி நியமித்துள்ளது. ராஜ்ய காங்கிரசில் புது நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

சுமார் 82,000 வீட்டு உபயோக மின்சார மீட்டர்கள் 1953-ல் இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டன; முந்திய ஆண்டில் சுமார் 34,360 மீட்டர்கள் தயாரிக்கப்பட்டன.

தெரிந்து கொள்ளுங்கள்

1. இந்தியாவில் 19 கோடி மனங்கு எடையுள்ள பல வகையான பழங்கள் சாகுபடியாகின்றன; பழங்கள் சாகுபடியாகிற மொத்த விஸ்தீரணம் சுமார் 31-லட்சத்து 8 ஆயிரம் ஏகராவென்று மதிப்பிடப்படுகிறது.
2. கல்கத்தாவிலுள்ள டம்டம் விமான நிலையம் உலகத்திலேயே மிகவும் மும்முரமாய் போக்குவரத்து நடக்கிற விமான நிலையமாகும்; சராசரியாக ஒவ்வொரு 8 நிமிஷத்திலும் ஒரு விமானம் அங்கே வந்திறங்கும் அல்லது அங்கிருந்து புறப்படும்.
3. இந்தியாவில் சுமார் 7,00,00,000 பேர் மலேரியாவினால் பாதிக்கப்படுகிறார்கள்; ஆண்டுதோறும் சுமார் 7,00,000 பேர் அதனால் மரணமடைகிறார்கள்.
4. சமுதாய அபிவிருத்தி திட்ட வேலை பிரதேசங்களில் வேலை ஆரம்பித்து நடந்துவந்துள்ள முதலாவது 15 மாத காலத்தில் 76,000 ஏகராவுக்கும் அதிக விஸ்தீரணமுள்ள நிலங்கள் மீட்கப்பட்டுவிட்டன.
5. 1953—54-ல் வசூலான மத்திய எக்சைஸ் வருமான நிகரத்தொகை 92,72,26,000 ரூபாய்.
6. இந்தியாவில் பருத்தித் துணி ஆலைத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளரில் மூன்றிலிரண்டு பங்கு பேர் பம்பாய் மாநிலத்திலேயே இருக்கின்றனர். இந்தியா நெடுகிலுமாக இத்தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளரின தினசரி சராசரி எண்ணிக்கை ஜனவரி மாதத்தில் 7,44,449 ஆக இருந்தது.
7. பாட்னாவுக்கருகில் மொகாமேயில் கங்கை நதியின் மீது கட்டப்படுகிற பாலத்திற்காகத் தோண்டப்படுகிற அஸ்திவாரம் உலகத்தில் வேறெந்த பாலத்திற்கும் தோண்டப்பட்டுள்ள அஸ்திவாரத்தை எல்லாம் விட அதிக ஆழமுள்ளதாக இருக்கும். இது சம்பந்தமான பூர்வாங்க வேலை ஆரம்பமாகிவிட்டது. அதில் ஒவ்வொரு பகுதியும் (ஸ்பான்) 600 அடி அகலமுள்ளதாக இருக்கும்; இந்தியாவிலுள்ள ரயில்வே பாலங்களில் வேறெதிலும் அவைகளுக்கு இவ்வளவு அகலம் இல்லை.
8. இந்தியாவிலுள்ள பல்வேறு தொழில்களிலும் வேலை பார்க்கும் பெண் தொழிலாளரில் 50 சதவிகிதம் முதல் 80 சதவிகிதம் வரையிலுள்ளவர்கள் விவாகமானவர்கள்: விதவைகள் 20 சத விகிதம் முதல் 50 சதவிகிதம் வரையிலுள்ளனர்.
9. சமூதாய அபிவிருத்தித் திட்ட வேலைகள் நடந்துள்ள முதல் 15 மாதங்களில் ஜனங்கள் இஷ்டபூர்வமாய் அவைகளுக்கு அளித்துள்ள உதவியின் மதிப்பு சுமார் 1 கோடி 95 லட்ச ரூபாயாகும்; அதாவது, அவைகளுக்காக சர்க்கார் செய்துள்ள மொத்தச் செலவில் சுமார் 58 சதவிகிதமாகும்.
10. இந்தியாவில் 1953-ல் சுமார் 6,700 ரயில் வாகன்களும், 800 ரயில் பெட்டிகளும், 73 என்ஜின்களும் தயாரிக்கப்பட்டன. அவ்வாண்டில் சுமார் 1,330 வாகன்களும், 220 ரயில் பெட்டிகளும், 112 என்ஜின்களும் இறக்குமதி செய்யப்பட்டன.

செய்திச் சுருள்

★

பழைய மாணவர் சங்க ஆண்டு விழா

அருப்புக்கோட்டை சைவ பானு க்ஷத்திரிய உயர்நிலைப் பள்ளியின் பழைய மாணவர் சங்க ஆண்டு விழா 20—6—54ல் உதவி செட்டில்மெண்ட் அதிகாரி திரு. கார்த்திகேயன், ஐ. ஏ. எஸ், தலைமையில் நடைபெற்றது. சங்க செயலாளர் திரு நாகலிங்கம் அனைவரையும் வரவேற்று சங்கத்தின் சாதனைகளைப் பற்றி தன் அறிக்கையில் கூறினார்.

தோழியர் பொருட்செல்வி — இளமுருகு 'படித்த பாவையர்' என்ற தலைப்பில், பல படித்த பெருமாட்டிகளின் வரலாறுகளைக் கொண்டு, படித்த மகளிர் கடமைகள் பற்றி எடுத்துக் கூறினார்.

தோழர் மீ சு. இளமுருகு - பொருட்செல்வி 'வள்ளுவரும் வையகமும்' என்ற தலைப்பில், ஒரு சிலர் கற்பனையால் எழுந்த வள்ளுவர் படத்தை வணங்குதல் தவறுடையது என எடுத்துக்கூறி வள்ளுவர் கூற்றையும், வையத்தின் நடப்பையும் விளக்கினார்.

'நம் நாடு' துணை ஆசிரியர் தோழர் காஞ்சி—கல்யாணசுந்தரம் 'சமுதாயப் புரட்சி' என்ற தலைப்பில், பழையன கழிய, சமூகத்தில் சீர்திருத்தங்கள் தவிர்க்க முடியாத அளவில் தோன்றி வளர்கின்றன என்பதை உவமைகள் காட்டிப் பேசினார்.

வரவேற்பு

அருப்புக்கோட்டை ஜூன் 25—

இவ்வூர் ஸ்ரீ பு. அ. சௌந்திர பாண்டியனார் நினைவுப் படிப்பகத்தில், எஸ். பி. கே. உயர்நிலைப் பள்ளி பழைய மாணவர் சங்க ஆண்டு விழாவில் சொற்பொழிவாற்றவந்த தோழர்கள் காஞ்சி கல்யாணசுந்தரம், இளமுருகு தோழியர் பொற்செல்வி ஆகிய மூவருக்கும் 20—6—54 இரவு 11 மணிக்கு வரவேற்பு அளிக்கப்பட்டு, வரவேற்பு இதழும் வாசித்தளிக்கப்பட்டதுடன், புகைப்படமும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

பம்பாய் தமிழர் கலைமன்ற ஆரம்ப விழா

10—6—54ல், தாராவி முகமது லப்பைவாடி கொட்டகையில் மேற்படி மன்ற விழா நடைபெற்றது. வரவேற்புரை ஆற்றிய திரு டி. எஸ். ராஜன் உழைத்துக் களைத்த நேரத்திலே, கலை பொலிவு கண்டு மகிழ்ந்த தமிழனின் பண்பாட்டை வளர்க்க இப்புதிய மன்றம் முயற்சிக்குமென கூறினார். விழாவிற்கு தலைமை தாங்கிய திரு இவ. பாண்டியன் பேதமற்ற சமதர்ம சமுதாயத்தை உருவாக்கும் லட்சியத்திற்கு சாதகமான மனப் பக்குவத்தை ஏற்படுத்த கலை மன்றங்கள் தொழிற்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார் பின்னர், "ரத்தப் பாசு" என்ற நாடகத்தை மன்ற உறுப்பினர்களால் நடைபெற்றது.

திருநெல்வேலி ஜில்லா ஆதிதிராவிட மகாஜன சங்கம்

3—6—54 காலை 10 மணிக்கு சங்க உறுப்பினர் கூட்டம் தோழர் ம. ய. மந்திரமூர்த்தி தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். பின்னர், தாயகம் செல்லும் தோழர் எஸ். எம். சுப்பையாவை தோழர்கள் பலர் பாராட்டிப் பேசினர்.

* * *

17—6—54 இரவு 9 மணிக்கு தோழர் ம பு மந்திரமூர்த்தி தலைமையில் நிர்வாகக்குழுக் கூட்டம் நடைபெற்றது. கடிதப் போக்குவரத்துகள் கவனிக்கப்பட்டபின், அனுதாபத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

மகிழ்ச்சிக் கூட்டம்

சென்னை இராயப்பேட்டை தி மு. க. 37-வது வட்ட புதிய கழகக் கட்டடத்தில் 13-6-54- காலை 10 மணிக்கு மகிழ்ச்சிக் கூட்டம் தோழர் ம. கி. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் குமாரவேல், நுங்கம்பாக்கம் பாலசுந்தரனார் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டபின். தோழர்கள்: மு புரட்சிமணி, மு. அரங்கநாதன், எஸ். சுந்தரம், ஏ. எல். கே. சாமி ஆகிய தோழர்கள் புதிய இடம் கிடைத்தமைக்கு மகிழ்ச்சி தெரிவித்தும், கழக வளர்ச்சிக்கு என்னென்ன வழி வகைகள் செய்ய வேண்டும் என்பதையும் விளக்கிப் பேசினர்.

சர்க்கரை ஆலைத் தொழிலாளர் சங்கம்

17—6—54ல், நெல்லிக்குப்பம் 'டிண்டிலர்ஸ் அண்டு சுகர் பாக்டரி ஒர்க்கர்ஸ் யூனியன்' 5-வது ஆண்டு தேர்தல் கூட்டம் தோழர் ஏ இரத்தினம் எம். எல். ஏ, தலைமையில் நடைபெற்றது ஆண்டு அறிக்கை வாசிக்கப்பட்டு வரவு—செலவு கணக்குகள் ஒப்புக் கொள்ளப்பட்டன. பின்னர், தொழிற்சாலையில் வேலை செய்யும் எல்லா தொழிலாளர்களுக்கும் உடனடியாக 2 அணா கூலி உயர்வு தேவையென்றும், அவை 1—10—53ல் இருந்து அமுலுக்கு கொண்டு வரவேண்டும் என்றும், குறைந்தபட்ச கூலி ரூ. 1—4—0 சாதாரண தொழிலாளருக்கும் திறமை உள்ள தொழிலாளர்களுக்கு 2 ரூபாயாகவும் கொடுக்கப் படவேண்டும் எனவும் சங்கப் பொதுக் காரியதரிசியால் கோரப்பட்டது. தோழர்கள் பலர் பேசினர்; புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

நீலா நிலையம் திறப்பு

21—6—54 காலை 9-30 மணிக்கு சேலம் செரி ரோட்டில் நீலா நிலையத்தை—புத்தக வெளியீட்டு நிலையம்—தோழர் ஈ வெ. கி. சம்பத் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.

பம்பாய் தெ. இ. ஆதிதிராவிட மகாஜன சங்கம்

12—6—54ல், தோழர் ஓ. த. அய்யாசாமி தலைமையில், கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. அதுபோது 1954-55-க்கு பஞ்சாயத்துக் குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டு, சங்கச் சார்பில் தாராவி தமிழ்ப் பெண்மணிகளுக்கு பின்னல், தையற் தொழிற் பயிற்சி வகுப்புகள் நடத்துதற்குரிய சாத்திய—அசாத்தியக் கூறுகளை விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

பகுத்தறிவு நாடகமன்றம்

கன்னியூர் தி. மு. க. சார்பில் இயக்கத் தோழர்களால் பகுத்தறிவு நாடக மன்றம் துவக்கப்பட்டு, "நச்சுக் கோப்பை" என்ற நாடகம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

சேலம் வ. உ. சிதம்பரம் பிள்ளை மார்க்கட் வியாபாரிகள் சங்கம்

18—6—54 மாலை 3 மணிக்கு சங்க காரியக் கமிட்டிக் கூட்டம் ஜனாப் கே. எஸ். காதர் மைதீன் ராவுத்தர் தலைமையில் நடைபெறுபோது, தோழர்கள் பூ கே. புஜங்க நாயக, எம் சி. டி. எம். சிதம்பரம் செட்டியார், திரு. வி. க., மாயூரம் ராமமூர்த்தி ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், காமராசர் மந்திரி சபையை வரவேற்றும், சென்னை மாநில அரசாங்க அலுவல்களைத் தமிழிலேயே நடத்தக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருமணங்கள்

4—6—54ல் நடைபெற்ற திருப்பூர் தோழர் கே. சுப்பிரமணியம் — தோழியர் நாச்சம்மாள் திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிக்கப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

* * *

13—6—54 காலை வன்னியம்பதியில், திரு. திருமால் நாடார் குமாரர் திரு. சேகருக்கும்— திரு. ராச நாடார் குமாரி திருமதி சரோஜாவுக்கும் திருமணம் நடைபெற்றது. மணமக்களுக்கு நண்பர்களாலும் உறவினர்களாலும் அன்பளிப்புகள் கொடுக்கப்பட்டது. இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 2 அன்பளிப்பு வழங்கப்பட்டது—வரப்பெற்றோம்-நன்றியுடையது—பொறுப்பாளர்.

* * *

அரியலூரில் தோழர் கலியபெருமாள்—தோழியர் அச்சியம்மாள் திருமணம் தோழர் பீ. கரீம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சுந்தரவடிவேலு, சி. கலியபெருமாள், க. சோமசுந்தரம், கோ. வேபெருமாள் டி. கே. திராவிடமணி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். மணமக்களுக்கு தோழர்கள் பலர் பரிசுகள் வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது — வரப்பெற்றோம்— நன்றியுடையது— பொறுப்பாளர்

• • •

4—6—54 காலை 9 மணிக்கு மயூரம், கூறைநாடு ஐயனார் கோவில் தெருவில், தோழர் பி. மா. அமிர்தலிங்கத்திற்கும் — தோழியர் சுந்தராம்பாளுக்கும் திருந்திய திருமணம் தோழர் டி. எஸ். என் சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் திருமணத்தைப் பாராட்டிப் பேசினர்.

* * *

மதுரை பொன்னகரம் மீனாட்சி தோப்பு தோழர் தங்கத்துரைக்கும்—தோழியர் மணி அம்மாளுக்கும் சீர்திருத்தத் திருமணம் 10—6—54 இரவு 8 மணியளவிற்கு தோழர் டி. எஸ். இராமப்பன் தலைமையில் நடைபெற்றது.

* * *

12—6—54ல் புதுக்கோட்டை வலை தி மு. கழக சார்பாக செயலாளர் தோழர் கெ. சீனிவாசன் தலைமையில் தோழர் ராமலிங்கத்திற்கும் —தோழியர் இசக்கி அம்மைக்கும் விதவைத் திருமணம் மணமகன் இல்லத்தில் நடைபெற்றது.

• • •

அந்தக்குடி சதிவழக்கில் இணைக்கப்பட்டு, 11 மாதங்கள் வரை சிறையிலிருந்தவரும், சீபுரம் தி. மு கழகத் தோழருமான கே. ஆறுமுகத்துக்கும்—தோழர் மேரி அம்மையாருக்கும் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டி தோழர் மருவேல் செல்லப்பா பேசினார்.

∴ ∴ ∴

16—6—54 காலை 7 மணிக்கு கொண்டல் (சீர்காழி) தி. மு. கழகச் செயலாளர் தோழர் அரங்கசாமிக்கும் — தோழியர் சித்திரவல்லிக்கும் திருமணம் தோழர் சாம்பசிவம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சுப்பையா, க. அறிவழகன் ஆகியோர் விரிவுரையாற்றினர்.

* * *

20—6—54 காலை $7\frac{1}{2}$ மணிக்கு வளையூரில் தோழர் தனராசு—தோழியர் தனலக்ஷ்மி சீர்திருத்தத் திருமணம் வளையூர் ஊராட்சித் தலைவர் கே. எம். முத்துகுமாரசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சாமிநாதன், ராமதேவன், ஏ. கிருஷ்ணமூர்த்தி, ஆறுமுகம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

உலக அரங்கில்

வாஷிங்டன் :
பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சிலும், அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவரும் வெள்ளை மாளிகையில் சந்தித்துப் பேசினார்கள்.

* * *

மேற்கு உலகில் கம்யூனிசத்தை அனுமதிக்கக் கூடாது என்று அமெரிக்க செனட் சபை தீர்மானம் ஒன்று நிறைவேற்றியது. 96 உறுப்பினர் கொண்ட அச்சபையில் இத் தீர்மானத்திற்கு ஆதரவாக 65 பேர் வாக்களித்தார்கள் என்று தெரிகிறது.

★

மாஸ்கோ :
மாஸ்கோவில் இந்தியத் தூதராலயத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் வெளிநாட்டிலாகா அமைச்சர் மாலடோவை சந்தித்துப் பேசினார். இந்திய அதிகாரியான பி என். கால் சந்திப்புப் பற்றி ஏதும் சொல்ல மறுத்துவிட்டார்.

★

ஒட்டாவா :
அக்டோபர் 4-ம் தேதி முதல் 9-ம் தேதிவரை கொழும்புத் திட்ட ஆலோசனைக் குழுவினர் ஒட்டாவாவில் கூடிப் பேசினர் என்று கனடா வெளிநாட்டமைச்சர் லிஸ்டர் பியர்சன் கூறினார்.

★

லண்டன் :
இந்திய பூமிநூல் சர்வே இலாகாவைச் சேர்ந்த டாக்டர் ஏ. பி. சுப்பிரமணியம் என்பாருக்கு ராயல் கழகத்தினரும், கப்பீல்டு கழகமும் பரிசளித்திருக்கிறது. இப்பரிசின் மூலம் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தொடர்ந்து படிக்க இயலுமாம்.

* * *

இந்திய இராணுவத்தில் முன்பு ஆலோசகராக இருந்த ஹொரால்டு வில்கின்சன், தனது உயிலில் தன்னிடம் வேலை பார்த்த இந்தியர் தக்கர் கோவிந்தசிங் என்பவருக்கு 1,500 எழுதி வைத்திருக்கிறார்.

★

இரங்கூன் :
பர்மாவைச் சேர்ந்த டகோடா விமானமொன்று அதிலிருந்த பிரயாணிகள் மூவர் துப்பாக்கியின் துணை கொண்டு விமானியை இறங்கச் செய்து 2,25,000 டாலரின் பெறுமான சர்க்கார் பொருள்களைக் கொள்ளையடித்தனர். பிரயாணிகளுக்குக் கொஞ்சநேரமும் தாவில் லையாம்!

★

டோக்கியோ :
நீர்வெடிக் குண்டினால் காயமுற்ற 23 ஜப்பானியர்களுக்கு அமெரிக்காவின் சார்பில் ஜப்பான் 5000 டாலரில் நஷ்டஈடு தரும் என்று தெரிகிறது

* * *

ஐ. நா. சபையின் ஆசிய, தூரக் கிழக்குப் பொருளாதாரக் கழகத்தில் இதுவரையில் உதவியாளராக இருந்த ஜப்பான் இப்போது முழு அதிகாரம் உடைய உறுப்பினராகச் சேர்க்கப்பட்டிருக்கிறது

★

ஹாங்காங் :
கொரியாவை இணைத்து ஐக்கிய கொரியா அமைக்கப் போராடத் தயார் என்று சிங்மென் ரீ கூறியுள்ளார்.

★

சாம்பெக்ஸ் :
எவரெஸ்ட் வீரரான டென்சிங், 'கவின் - ஆஸ்டின்' பள்ளியில், தனது மூன்று வார பயிற்சியை முடித்துக் கொண்டார் இமயமலையின் ஏறும் பயிற்சிக்கு தயாராக அவர் நிருபர்களிடம் கூறினார்.

அக்ரா :
கோல்டு கோஸ்ட் முழு சுதந்திரம் அடைய இன்னும் கொஞ்ச தூரந்தான் செல்ல வேண்டியிருக்கிறது என்று, கோல்டு கோஸ்டின் பிரதமர் டாக்டர் குவாம் நக்குமா கூறினார்.

★

கெய்ரோ :
மத்திய கிழக்கில் பிரிட்டிஷ் படைகளின் தலைமைக் காரியாலயத்தை சைப்ரசுக்கு மாற்றியதால் சூயஸ் கால்வாய்ப் பகுதியில் பிரிட்டிஷ் பாதுகாப்பு ஏற்பாடுகளில் மாற்றம் ஏதும் ஏற்படாதென்று கெய்ரோவில் பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் கூறினார்.

★

மிச்சிகன் :
சோவியத் நாடு ஒப்பவில்லை என்றாலும், சமாதானத்திற்கு அணுசக்தியைப் பயன்படுத்தலில் அமெரிக்காவும் நேசநாடுகளும் முன்வர வேண்டுமென்று அணுசக்தி கூட்டுக் கமிஷனின் தலைவர் ஸ்டெர்லிங்கோல் கூறினார்.

★

நியூயார்க் :
இந்தியாவின் மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த கர்ப்பத் தடையால் மட்டுமே முடியாது என்று உலக சுகாதாரக் கழகத்தைச் சேர்ந்த மேரி டைலர் கூறியிருக்கிறார்.

* * *

உலகிலேயே பெரியது என்று கூறப்படும் ரயில்வே எஞ்சின் அமெரிக்காவில் ஓட்ட அனுப்பப் பட்டது. 586 டன் எடையுள்ளதும் 160 அடி நீளமுடையதுமான இந்த ரயில்வே எஞ்சின் மணிக்கு 60 மைல் வேகம் செல்லுமாம். இதைக் கட்டி முடிக்க ஐந்து ஆண்டுகள் ஆயிற்று என்று தெரிகிறது.

★

டுனிஸ் :
டுனிஷியாவில் கலகக்காரர்கள் மிஷின் துப்பாக்கிகள் மூலம் குண்டுமாரி பொழிந்து நான்கு ஐரோப்பியர்களையும், அவர்கள் குழந்தைகளையும் கொன்றார்கள் என்று தெரிகிறது.

★

கான்பெர்ரா :
ஆஸ்திரேலியாவின் சிறுபதக் கொள்கையைக் கண்டிக்கும் வகையில் பேசிய இந்தியத் தூதுவர் கரியப்பாவின்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் போவதில்லை என்று ஆஸ்திரேலிய அதிகாரி ஒருவர் கூறினார்.

★

ஸிட்னி :
சிட்னியில் பிரெஞ்சு கான்சல்-ஜெனரலான ஜீயன் போனர், கூடிய விரைவில் மக்கள் சீனாவை பிரான்சும் அமெரிக்காவும் அங்கீகரிக்கும் என்று கூறினார்.

★

ஹைதர்பியா :
கம்யூனிஸ்டு சீனா கோக்கிச் செல்லும் கப்பல்களை டார்மோசா சர்க்கார் தடுத்து நிறுத்தியது உண்மைதான் என்று தேசியச் சீன சர்க்கார் அதிகாரி ஒருவர் கூறினார்.

★

ரோம் :
ஜினிவாவில் பிரிட்டிஷாரும் சீனர்களும், நேருக்கு நேர் சந்தித்ததில் கொழும்பு மாநாட்டில் கலந்து கொண்டவர்களையும் சேர்க்கும் வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாக பிரிட்டிஷ் வெளி நாட்டிலாகா காரியதரிசி அந்தோணி பிரிட்டன் கூறினார்.

சீனப் பிரதமர் இந்தியா வந்தார்.....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அமெரிக்கத் தூதுவர் ஜார்ஜ் ஆலன் காஷ்மீர் சென்றிருக்கிறார் என்றாலும், அவருக்குப் பதில் அந்த பணியினை செய்யும் அதிகாரி வரவேற்பில் கலந்துகொள்ள மறுத்தார்.

அமெரிக்கா, சீனாவை ஒரு நாடு என்று ஒப்புக்கொள்ளாததால், சீனப் பிரதமருக்கு அளிக்கும் வரவேற்பில் கலந்து கொள்வது சரியல்ல என்கிறார்கள்.

அதுபோலவே, ஜப்பான்—சீனா இடையே சமாதான ஒப்பந்தம் இன்னமும் கையெழுத்தாகவில்லை என்று காரணம் காட்டி, ஜப்பானியத் தூதுவர் கலந்து கொள்ளவில்லை.

ஒரு நாட்டு அதிபரின் அழைப்பை அந்த நாட்டிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் மறுப்பது மிகவும் அரிதான செயலாகும்.

கம்யூனிஸ்டு சீனப் பிரதமர் சூ-என்-லாய் வெள்ளிக்கிழமை காலை புதுடில்லி வந்து சேர்ந்தார். அவரை விமான நிலையத்தில் இந்தியப் பிரதமர் நேரு வரவேற்றார். பல நாடுகளின் இராஜதந்திரிகளும், தூதுவர்களும் விமான நிலையத்தில் கூடியிருந்து சீனப் பிரதமரை வரவேற்றனர்.

சீனப் பிரதமர், தரைப்படை, விமானப் படையின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றபின்னர், இந்திய மக்களுக்கான செய்தியை சீன மொழியில் படித்தார்.

இந்திய கம்யூனிஸ்டுகளும், பாராளுமன்ற கம்யூனிஸ்டு உறுப்பினர்களும், ரோஜா இதழ்களைத் தூவி, சூ-என்-லாய் வருகைக்கு மகிழ்ச்சி தெரிவித்தனர்.

பத்திரிகை நிருபர்களைச் சந்தித்த பின்னர், சீனப் பிரதமர் நேருவுடன் ஜனாதிபதி மாளிகைக்குச் சென்றார்.

பின்னர் 9 மணிக்கு ராஜ்காட் சென்று காந்தியாரின் சமாதிக்கு மாலை சூட்டினார்.

நேற்று மாலை சூ-என்-லாயும், நேருவும் சந்தித்து மூன்று மணி நேரம் பேசிக்கொண்டிருந்தனர். சந்திப்பின்போது சீன மொழி பெயர்ப்பாளர் ஒருவர் மட்டுமே கூட இருந்தார் என்றும், சூ-என்-லாய் சீன மொழியில் பண்டித நேருவுடன் பேசினார் என்றும் தெரிகிறது. இரு பிரதமர்களும் என்ன பேசினார்கள் என்பது தெரிவிக்கப்படவில்லை.

நல்லதோர் அரசியல் கால்கொள்ள!

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

விட்டனர். இதனை மக்களில் ஒரு சிலர் ஆராய்ந்து பார்க்க ஆரம்பித்து அதிலுள்ள ஆபாசங்களை உணர்ந்து அவைகளை மறுக்கத் தொடங்கிய போதன்றி, அவைகளை அவனிக் கெடுத்துரைக்க ஆரம்பித்ததைக் கண்ட மதப் புலவர்களும், புரவலர்களும் உண்மையைக் கூறுவதற்கு முன் சில காலம்வரை பொய்தான் பேசியாக வேண்டுமென்ற அடிப்படையை முதலாக வைத்தோ அன்றோ ஆண்டவனுக்கும், மதத்திற்கும் மத நூல்களுக்கும் வேறு வேறு விதமான பொருள்களும் விளக்கங்களும் கூறத் தொடங்கினர். மதம்—கடவுள் பற்றி அன்று எழுதி வைத்த கட்டுக் கதைகளில் சீர்திருத்தம் காண முயன்றது மனம் சோர்தல் கல் ஆராய்வது போன்று முடியுமேயன்றி, யாதொரு பயனையும் அடைந்து விட முடியாது என்பதைக்கூட எண்ணிப் பார்த்து உண்மை காண முடியாத நிலையில் மதப் புலவர்கள் இன்றும் உள்ளனரே என்று எண்ணும்போது நமக்கு அவர்கள்பால் இரக்கம் உண்டாகிறது.

புராண இதிகாசங்களிலுள்ள சம்பவங்களுக்கு, நான் ஒரு பொருள் கூறினால் அதை மறுத்து, இன்னொருவர் இன்னொரு பொருள் கூறுவார்; இந்த இருவருடைய கருத்துக்களையும் மறுத்து வேறொருவர் வேறொரு விதமான கருத்தைக் கூறுவார்; ஒவ்வொருவர் கூறுவதும் ஒவ்வொரு சாரருக்குச் சரியாகவே தோன்றும். மொத்தத்தில் யார் கூறுவதையும் எல்லோரும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள் உதாரணமாக காஞ்சிபுரத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பெரியபுராணச் சமயத்துக் கொண்டர் சிறுத்தொண்டரைப் பற்றிய ஒரு சொற்பொழிவு காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலில் ஒரு சமயம் நடைபெற்றது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியராக இருந்த சிதம்பரநாதன் அவர்கள், "சிறுத்தொண்டன் ஒரு பெரிய ஞானியாக இருந்த காரணத்தால்தான், மனம் வைராக்கியமேறி, மகனைக் கொலைச் சம்மதித்தான்; ஆனால், சிராளனின் தாயார் மனக்கலக்கத்தோடே மகனைக் கொல்லும் அந்தக் காரியத்தைச் செய்ய இசைந்தாள் என்பதை சேக்கிழாரே ஒப்புக்கொண்டிருக்கிறார்" என்று குறிப்பிட்டுப் பேசினார். இதனைக் கேட்டுக்கொண்டிருந்த, பிரசங்கி புரிசை—முருகேசனார் வெகுண்டெழுந்து, சிதம்பரநாதரின் உரையை மறுத்தார். பிரசங்கத்தைக் கேட்கக் கூடியிருந்த பக்தர்கள், யார் கூறுவது மெய்யென்பதை அறிந்துகொள்ள முடியாது திகைத்தனர்.

எனவேதான், மதநூல்களில் கூறப்பட்டுள்ள சம்பவங்களை வைத்துக்கொண்டு சீர்திருத்தம் காண முயன்றால், அவற்றிற்கு ஒரு போதும் முடிவு ஏற்படாது. காரணம், அவையெல்லாம் கற்பனை என்பதேயாகும். கற்பனை—கற்பித்துக் கூறப்படுவது; இல்லாத ஒன்றை இருப்பதாகக் கொள்ளவேண்டுமென்று இட்டுக் கட்டிக் கூறுவது; அப்படிக் கூறப்படும் கற்பனை சம்பவம், ஒவ்வொருவர் கருத்துக்கும் ஒவ்வொரு விதமாக உருவெடுக்கும்; ஒன்றுக்கொன்று மாறுபடும்; கருத்துக்களையும், முன்னுக்குப் பின் முரண்படும் கொள்கைகளையும், சொல்வோர்—கேட்போர் ஆகிய இரு சாரருக்கும் 'இதுவா அதுவா' என்ற மயக்கத்தைத்தான் மத நூல்களில் காண முடியும்; நல ஆதாரம் காட்டி சந்தேகங்களை நீக்கி வைப்பது என்பது மீண்டும் மீண்டும் சந்தேகத்தையே வளர்ப்பதாகும்; எனவே, கலை நிலைக்கும், மக்களின் அறிவு வளர்ச்சிக்கும், இப்பகைப் பணியிலும் ஒத்துவரக் கூடியதாக உண்மையை உணரும்படி செய்வது தான் முறையாகுமேயன்றி சந்தர்ப்பவாதிகளைப் போல் தங்களைச் சாக்காகக் காட்ட முயல்வது நமக்கும் பிறர்க்கும் கேடு செய்யும் ஒரு பெருங் குற்றமாகும். இப்படிப்பட்ட பெருங் குற்றங்களை மதவாதிகளும், புராணப் பிரசங்கிகளும் செய்வது போதாதென்று, அரசியல் வாதிகளும் செய்ய முற்பட்டு விட்டிருக்கின்ற அவலத்தை என்னும்போதுதான், இத்தகைய சீர்திருத்த எதார்த்தவாதம் மிக மிக அவசியம் என்று நாம் உணர்கிறோம்.

மற்ற எந்த கட்சியாரின் கொள்கைகள் — திட்டங்கள் எவ்வளவு நல்லவையாக—மக்கள் வாழ்வுக்குப் பயனளிப்பவையாக இருந்தாலும் அவற்றையும், அவற்றை வகுத்தவர்களை

கழகக்கூட்டங்கள்

★

ஆயக்காரம்புலம்-2

28—6—54 திங்கள் மாலை
பேசுவோர் :
ஈ. வே. கி. சம்பத்
எஸ். அப்பாவு

★

ஆதிவாகநத்தம்

(புவனகிரி வட்டம்)
29—6—54 மாலை 5 மணிக்கு
பேசுவோர் :
க. அறிவழகன்
பிச்சைமுத்து

சென்னை தமிழாசிரியர் கழகப் பொதுக்கூட்டம்

அண்மையில் சிதம்பரத்தில் நடைபெற இருக்கும் மாகாணத் தமிழாசிரியர் மாநாடு சிறப்புற நடைபெற வேண்டித் தமிழ்ப் பேராசிரியர் மயிலை. சிவ. முத்து தலைமையில், சென்னைப் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் 27—6—54 மாலை 4 மணிக்கு பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

திருமணம்

28—6—54 காலை 9 மணியளவில், திருச்சி, முத்தமணியக்காரத் தெருவில் தோழர் எம். முத்து—தோழியர் சங்கரம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும் அதுசமயம் தோழர்கள் எஸ். செமோறன், எம். என். மணி, ஜி. யாங்குசம், அம்பிக் தருமலிங்கம் ஆகியோர் பேசுவர்.

யும் தாக்குவதுதான் தங்களின் பொதுவுடைமைத் தத்துவம் என்ற முறையில், உடம்பில் ஜீவன் இருந்தும், பேச்சிலும் எழுத்திலும் ஜீவன் இல்லாததை தெளிவாக விளக்கி இதுதான் எங்கள் 'ஜீவா' தாரக் கொள்கை — ஷெல்லியை உச்சரித்த வாயாலேயே கம்பனையும் உச்சரிப்போம்—மேடையிலே மாஸ்கோவைக் காண்போம்-மாடியிலே மற்றவர்களைத் தாக்கும் திட்டங்களை வகுப்போம்-என்ற போக்கில், நாட்டை நாசப்பாதைக்கு இட்டுச் செல்லும் இந்நாட்டுப் பொதுவுடைமைவாதிகளின் மத்தியில் நின்றுகொண்டு சீர்திருத்தத் துறையை அடையும் பகுத்தறிவுப் பாதையைச் செப்பனிட்டுவரும் நம் முயற்சி, சாக்ரடீஸ் காலத்தைப் போன்ற அவ்வளவு கஷ்டமுடையதுதான் என்று நான் சொன்னால் நீங்கள் ஆச்சரியப்படக்கூடாது.

—(தலைமையுரை முடியவில்லை பின்னர் வெளிவரும்.)

சொர்க்கவாசல்......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

னதை எடுத்துக்கொள்ளலாம்.

பாரம்பரை பாத்யமுள்ள அர்ச்சகர்களையும் இனாம் நிலங்களும் கொண்ட கோவில்கள் ஆந்திர ராஜ்யத்தில் 4,000 உள்ளன என்று தெரிகிறது.

அர்ச்சகர்களுக்கு பூஜை செய்யும்போது தாய்மொழி 'மந்திரம்' எவ்வளவென்பதை பழக்க வழக்கங்கள் பற்றி ஆராய்ச்சி நடத்திய பிறகு தீர்மானிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

இந்த ஏற்பாடுகள் ஆந்திர அறநிலைய அமைச்சர் டி. விஸ்வநாதம் தலைமையில் நடைபெற்றன என்று தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால், அறிஞர் அச்சகத்தில் அச்சிட்டு ... (28, ... நாராயண செட்டித் தெரு, ...) வெளியிடப்பெற்றது ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.